# சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும் (பாகம் - II)

(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B )

1970ம் ஆண்டு பொதுத் தேர்தல் மே மாதம் 27ந் திகதி நடைபெற்றது. அன்றைய 151 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றில் 91 தொகுதிகளில் வெற்றியீட்டி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெற்றது. இடதுசாரிகளான லங்கா சமசமாஜக் கட்சி (19) மற்றும் கம்யூனிட் கட்சி (06) ஆகியோர்களுடன் கூட்டுச் சேர்ந்து 2/3 பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி 17 ஆசனங்களையும் தமிழரசுக் கட்சி 13 ஆசனங்களையும் தமிழ் காங்கிரஸ் 03 ஆசனங்களையும் பெற்றிருந்தது. தமிழ்க் காங்கிரஸ் கட்சி மூலமாக கிளிநொச்சியில் வீ.ஆனந்தசங்கரி நல்லூரில் சி.அருளம்பலம் வட்டுக்கோட்டையில் ஏ. தியாகராஜா ஆகியோர் தெரிவாகியிருந்தார்கள்.
ஆனால் ஆட்சியமைத்த ஒரு வருடத்திக்குள் நாட்டில் ஒரு பூகம்பமே வெடித்தது எனலாம்.

**சே குவேரா புரட்சி**

1970ம் ஆண்டுக்கு முன்னரான ஆட்சி அதிகாரம் ஐக்கிய தேசியக் கட்சியினரினது கையிலிருந்தது. 1965 தொடக்கம் 1970 வரையிலும் ஆண்டு வந்திருந்தார்கள். பொதுவாக ஐக்கிய தேசியக் கட்சியை ஒரு முதலாளித்துவக் கட்சி என்றே வர்ணித்து வந்திருந்தார்கள். அக்காலத்தில் அது ஒரு சரியான கணிப்பீடே என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. பணக்காரர்களினதும் நிலச்சுவாந்தர்களினதும் வியாபாரிகளினதும் கட்சியாகவே அது பார்க்கப்பட்டது. இதனாலே அடிமட்ட கிராமத்தைய மக்கள் விவசாயக் கூலிகள் மற்றும் தொழிலாளர் வர்க்கம் ஆகியோர் பொருளாதாரத்தில் முன்னேற்றமின்றி குறைந்த வருமான வாழ்க்கை தரத்தில் காலத்தை கஸ்டத்துடன் கழித்து வந்திருந்தார்கள். இந்தக் கீழ் மட்ட ஏழை மக்களை ஒன்றிணைத்து பணக்கார வர்க்கத்திற்கு எதிராக ஆட்சியைக் கவிழ்க்குமளவுக்கு போராட்டம் இரகசியமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது. காடுகளிலும் மறைவிடங்களிலும் ஆயுதப் பயிற்சி பெற்று தாக்கக்கூடிய வலுபெற்றுக் கொண்ட போது 1970ல் ஆட்சி சுதந்திரக் கட்சிக்கு கை மாறியிருந்தது.

அந்தப் புரட்சியின் தலைவராக செயற்பட்டவர் றோகண விஜயவீர (1943 – 1989) என்னும் ஒரு சோஸலிசவாதி. சோவியத் யூனியன் லுமும்பா பல்கலைக் கழகத்தில் படித்தவர். சே குவேரா (1928-1967) என்ற ஆர்ஜென்டீனாவில் பிறந்து கியூபா புரட்சியை கொரில்லா போர் வழியில் நடத்தி பீடல் கஸ்ரோ ஆட்சியைக் கைப்பற்ற உதவிய புரட்சியாளரை மானசீகத் தலைவராகக் கொண்டிருந்தார். அவரைப் பின்பற்றி அதே கொரில்லா பாணியில் ஆயுதத்தால் ஆட்சிக் கவிழ்ப்புக்கு இங்கே முயற்சிக்கப்பட்டது. 1965ம் ஆண்டு ஜனதா விமுக்தி பெரமுன என்ற கட்சியை ஆரம்பித்து அதன் தலைவராக செயற்பட்டவர். அவரின் கட்சியினரால் சே குவேரா என்ற பெயரோடு 1971ம் ஆண்டு ஏப்ரல் 5ந் திகதி ஆரம்பித்த போலீஸ் நிலையத் தாக்குதல்கள் அதே ஆண்டு ஜூன் மாதத்தில் அடக்கப்பட்டு முடிவுக்கு வந்தது. அப்போது எதிர்க்கட்சியிலிருந்த

ஜே.ஆர்.ஜெயவர்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி புரட்சியை ஒடுக்க முழு ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தது. இந்திய பாகிஸ்தானிய துருப்புக்கள் உடனடியாக வரவழைக்கப்பட்டு நாட்டின் சொத்து வளங்களைப் பாதுகாக்கும் சேவையில் மட்டும் ஈடுபடுத்தப்பட்டார்கள். இந்த புரட்சி சுதந்திரக் கட்சியினருக்கு மட்டுமன்றி ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஒரு பாடத்தை புகட்டிவிட்டது எனக் கொள்ளலாம். ஆனாலும் இனவாத செயற்பாடுகளிலிருந்து தென்னிலங்கை கட்சிகள் விடுபட்டதாகவில்லை.

**தமிழர் அபிலாஷைகளை புறம்தள்ளிய யாப்பு**

சே குவேரா புரட்சி நிலைமைகள் முடிந்த கையோடு சுதந்திரக் கட்சியினர் இடதுசாரிகளின் கூட்டணியாக அரசியலமைப்பு நிர்ணய சபையை பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்டது. தெரிவுக்குழு ஒன்று அமைத்து அதனால் உருவாக்கப்பட்ட ஒரு யாப்பு வரைவு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஆராயப்பட்டது. அதில் பாராளுமன்றம் என இருந்த இரு அங்க சபை (பிரதிநிதிகள் சபையும் செனற் சபையும்) இல்லாது ஒழிக்கப்பட்டு தேசிய அரசுப் பேரவை என்ற ஓரங்க சபையாக மாற்றம் பெற்றிருந்தது. இது முதற்தடவை கூட்டப்பட்ட திகதியிலிருந்து 6 வருடத்திற்கு பதவிக்காலத்தை கொண்டிருக்கும் எனவும் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. சோல்பரி அரசியலமைப்பில் காணப்பட்ட பல சிறுபான்மையினருக்கு ஏற்ற வகையிலான அம்சங்கள் அகற்றப்பட்டும் அந்த அரசியலமைப்பின் உறுப்புரைகளுக்கு முரணான விடயங்களையும் புது வரைவு கொண்டிருந்தது. அதன் ஆரம்ப நடவடிக்கைகளில் தமிழரசுக் கட்சியினர் பங்குபற்றி தமது நிலைப்பாட்டை வெளியிட்டு வந்தார்கள். ஒற்றையாட்சி: பௌத்த மதத்திற்கு முன்னுரிமை: சிங்கள அரசமொழியுரிமை போன்றவற்றை ஏற்றுக்கொள்ளாத தமிழரசு கட்சியினர் அவற்றிற்கு ஆட்சேபனைகளை தெரிவித்திருந்தார்கள்.

சோல்பரி அரசியலமைப்பிலிருந்து எந்தளவுக்கு சிறுபான்மையினருக்கு பாதகமான வகையில் 1972ம் ஆண்டைய குடியரசு அரசியலமைப்பு அமைந்திருந்தது என்பது அலசவேண்டிய ஒரு விடயமாகும்.

1. **சோல்பரி அரசியலமைப்பின் உறுப்புரை 29 (2) 1972ம் ஆண்டைய குடியரசு அரசியலமைப்பில் உள்வாங்கப்படவில்லை.** இதனால் அரசியலமைப்பின் மூலம் சிறுபான்மையினருக்கு இருந்த ஒரேயொரு பாதுகாப்பு அரணும் தகர்க்கப்பட்டது. சிறுபான்மையினரின் நலனைப் பாதுகாப்பதாக இருந்த உறுப்புரைக்கு மாற்றீடான வேறு ஏற்பாடு எதுவும் முற்போடப்படவுமில்லை. இது அரசாங்கத்தின் மீது தமிழ் மக்களின் வெறுப்பை உருவாக்கியது.
2. **இலங்கை குடியரசு ஒற்றையாட்சி அரசொன்றாகும் என உறுப்புரை 2 கூறுகிறது..** இது முதன்முதலாக இலங்கை அரசியலமைப்பு சட்டத்தில் அறிவிக்கப்பட்ட அரசின் தன்மையாகும். இலங்கையில் பல்வேறு இனத்தவர் மதத்தினர் மொழி பேசுபவர் வாழ்வதினால் இதை எதிர்த்து அதிகாரப் பகிர்வு தன்மையுள்ள ஒரு அரசாக சமஷ்டித் தன்மையில் அரசியலமைப்பு இருக்கவேண்டும் என்பதில் தமிழரசுப் பிரதிநிதிகள் ஒற்றுமையாக வலியுறுத்தி வந்திருந்தார்கள். அவை அரசாலும் ஏனைய எதிர்க்கட்சிகளாலும் சிறுதளவிலேனும் செவிமடுக்கப்படவில்லை. சாதாரணமாக தமிழர் பிரச்சினைகளில் அக்கறையைக் காட்டிவந்த லங்கா சமசமாஜ கட்சியும் கம்யூனிட் கட்சியும் கூட அரசோடு பங்காளிக் கட்சிகளாக மாறிவிட்டதுமன்றி அந்த அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் சமசமாஜ கட்சியின் திறமைசாலியான

அமைச்சர் கொல்வின் ஆர். டி. சில்வா செயலாற்றியிருந்தார். 1956இல் சிங்களம் மட்டும் சட்டத்தை பாராளுமன்றில் சுதந்திரக் கட்சியால் முன்மொழியப்பட்ட போது அதனை எதிர்த்து "அரச மொழி ஒன்றெனில் நாடு இரண்டாகும் அரச மொழி இரண்டெனில் நாடு ஒன்றாக இருக்கும்" என தனது வாதத்தில் இதே கொல்வின் ஆர். டி. சில்வா அன்று கூறியிருந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
3. **அத்தியாயம் 2 என்ற ஒரு தனி அத்தியாயத்தில் உறுப்புரை 6 இல் பௌத்த மதத்துக்கு முதன்மை தானம் வழங்கப்படும் என்றும் அதை பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும்** என மதத்தை முன்னிறுத்தி முதன்முதலில் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டதான ஒரு அம்சமாகும். சோல்பரி அரசியலமைப்பில் இருந்த ஜனநாயக மாண்பு அற்றுப்போய் ஒரு பக்கச் சார்பான பெரும்பான்மை இனத்தின் மதத்திக்கு வசதிவாய்ப்பளிக்கும் தன்மையாயிருந்தது.
4. 1956இல் இயற்றப்பட்ட 33ம் இலக்க சிங்களம் மட்டும் சட்டம் ஒரு நியதிச் சட்டமாகவே இருந்து வந்திருந்தது. **அச் சிங்களச்சட்டம் இந்த அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டு 3ம் அத்தியாயத்தில் உறுப்புரை 7 இல் அரச கரும மொழி என்ற தலைப்பில் ஒரு பகுதியாகிவிட்டது.**

**தமிழரசு கட்சியினரின் வெளியேற்றம்.**

தமிழரசுக்கட்சியினரால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் ஆலோசனைகள் எதுவும் ஏற்கப்படாது மறுதலிக்கப்பட்டதால் தமிழரசுத் தந்தை செல்வநாயகம் (1898 –1977) தலைமையில் தமிழரசுக் கட்சியினர் அரசியல் நிர்ணய சபை அமர்வை பகிஸ்கரித்து வெளிநடப்புச் செய்தனர். 'இனி ஆண்டவன்தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும்' என்று அப்போதுதான் செல்வநாயகம் மனம் நொந்து கூறியிருந்தார். அத்தோடு தனது காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் 1972ம் ஆண்டு ஐப்பசி மாதம் இராஜினாமாச் செய்திருந்தார். காங்கிரஸ்காரர் மூவரும் அரசை ஆதரித்தவர்களாக இருந்தார்கள். அருளம்பலம் யாழ்ப்பாண மாவட்ட அரசியல் அதிகாரியாக (Political Authority) நியமனம் பெற்றிருந்தார். தியாகராஜா தமிழ்க் காங்கிரஸை விட்டு விலகி சுதந்திரக் கட்சியுடன் இணைந்தார். இவர்கள் அரசுடன் இணைந்து அரசியலமைப்புக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதன் தாக்கமாக தியாகராஜாவை 1972ம் ஆண்டு கொழும்பில் வைத்து கொலைசெய்ய எடுத்த முயற்சியிலிருந்து அவர் தப்பினார். ஆனால் பின்னர் அவர் 1981ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து மாவட்ட சபை தேர்தலில் போட்டியிடும் பிரசாரக் கூட்டத்தின்போது சுடப்பட்டு இறந்தார் என்பது வரலாறு. அருளம்பலமும் ஆபத்தான சூழ்நிலையிலேயே வாழ்ந்து வந்திருந்தார்.
1972ல் இராஜிநாமா செய்த தொகுதியான காங்கேசன்துறைக்கு இடைத் தேர்தல் நடத்தாது அரசு இழுத்தடித்தது. பின் கடைசியில் 1975ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ந் திகதி (இரண்டரை வருடங்களுக்கு பின்) நடைபெற்ற இடைத்தேர்தலில் 16500 க்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் செல்வநாயகம் மீண்டும் தனது கட்சியின் நிலைப்பாட்டை மக்கள் ஆதரித்ததாக வெளிக்காட்டி பாராளுமன்றுக்கு தெரிவாகியிருந்தார்.

**தமிழாராட்சி மகாநாடு**

இந்தக் காலகட்டத்தில்தான் உலகத்தமிழாராட்சியின் 4வது மகாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடாத்த எடுத்த தீர்மானம் தமிழரின் வழமை வாழ்க்கையில் பாரதூரமான திருப்பத்தையும் ஈழப்போராட்டத்தின் ஆரம்பப் புள்ளியாகவும் நாட்டில் ஆயுத-வன்முறை கலாச்சாரம் தோற்றம்பெறவும் காலாக அமையப்பெற்றது.

( தொடரும் )